www.padippakam.com



# கி.மு.ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி.1621ஆம் ஆண்டு வரை....

# ஈழத்தவர் வரலாறு



## ஈழத்தவர்

இலங்கையின் வரலாறு என்பது இரண்டு இனங்களுக்கிடையிலான தொடர் போராட்டமாகவே இன்று வரை தொடர்ந்து வருகின்றது. குடிசார் வரலாற்றுப் புவியியல் அடிப்படையில் திராவிட இனத்தின் பாரம்பரியத் தீவாக விளங்கிய இலங்கை, தனது ஒரு பெரும்பகுதியில் புதியதொரு இனத்தினைச் சேர்த்துக் கொண்ட சம்பவம் கி.மு. 483 ஆம் ஆண்டு நிகழ்ந்தது. 'இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் இருந்த லாடா நாட்டின் மன்னன் தன் நாட்டிற்கு உதவாதவர்கள் எனக் கருதிய தன் மகன் சிங்ஹல விஜயனையும் அவனது தோழர்கள் எழுநூறு பேரையும் மரக்கலமொன்றில் ஏற்றி நாடு கடத்திவிட்டான். அவர்கள் தாமிரபர்ணிஎன்ற கொணாநதிக்கும் (காலஓயா) கதம்பநதிக்கும் (அருவியாறு) இடைப்பட்ட பிரதேசத்தில் வந்து சேர்ந்தனர். சிங்ஹல விஜயனின் வருகையுடன் இலங்கையில் சிங்கள மக்களது தோற்றம் ஆரம்பமாவதாக வரலாற்றுச் செய்திகள் கூறுகின்றன. அவை கூறத்தவறிய செய்திகள் என்னவென்றால் விஜயனும் அவனது தோழர்களும் இலங்கையின் கரையில் இறங்கியபோது, இலங்கையில் நாகரீகத்தில் முன்னேறிய ஒரு மக்கட் கூட்டமும் பண்டைய வாழ்க்கை முறையைக் கைக்கொண்டு வாழ்ந்த ஒரு மக்கட் கூட்டமும் வாழ்ந்து வந்துள்ளன என்பதாம். 'பகைவராக வந்த சிங்களவர்' ஓரளவு நாகரீகமடைந்திருந்த மக்கள் வசத்தில் இந்நாடு இருந்ததைக் கண்டனர்'. எனப் பார்க்கர் என்பார் தன் புராதன இலங்கை என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். இயக்கர் என்று வரலாற்று நூலில் கூறப்படும் இம்மக்கள் அரசியல் முறைகளுக்கு ஏற்ப வாழ்ந்தனர் என்று தோன்றுகிறது. அத்துடன் இவர்கள் நகரங்கள் என்று சொல்லக்கூடியதான குறைந்தது இரண்டு குடியேற்றிடங்களைக் கொண்டிருந்தனர் என்றும் தோன்றுகிறது. ஐந்தாம்படை என்று நாம் இப்பொழுது கூறும் உட்பகையின் உதவிகொண்டு இம்மக்களை இலகுவில் தம் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தனர் என்த தமது நூலில் ஏ.ஜி.ரணசிங்க என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

இராமாயணம் போன்ற காவிய நூல்கள் இலங்கையில் நாகரிகமான ஒரு மக்கட் கூட்டத்தினர் வாழ்ந்து வந்த செய்தியினைக் கூறுகின்றன.

ஆரியமொழி பேசிய மக்கள் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் 'இயக்கர்' என்று அழைக்கப்பட்ட ஒரு கூட்டத்தினர் இலங்கையில் வசித்து வந்தார்கள். சிங்கள இதிகாச வரலாற்றுப் பனுவலான மகாவம்சத்திலிருந்தே இலங்கையில் இயக்கர், நாகர் என அழைக்கப்பட்ட மக்கட் கூட்டத்தினர் வாழ்ந்துள்ளனர் என அறியமுடிகின்றது.

## இயக்கர்

மகாவம்சத்தின்படி புத்தர் ஞானம் பெற்று ஒன்பது மாதங்களுக்குப் பின்னர் இலங்கைக்கு வந்திருந்தார். அவ்வேளை இலங்கையில் இயக்கர்கள் நிறைந்திருந்தனர். மகாநாகா தோட்டத்தில் இயக்கர்கள் குழுமியிருந்தபோது அவர்கள் முன் தோன்றிய புத்தர், இயக்க மக்களது பயங்களை நீக்கி ரட்சித்ததாகக் குறிப்பு உள்ளது. தாமிபரணிப் பிரதேசம் எங்கும் இயக்கர்கள் பரவி வாழ்ந்துள்ளனர்.

அருவியாற்றுக்கும் மகாவலிகங்கைக்கும் தெற்கே இவர்களின் குடியிருப்புக்கள் அமைந்திருந்தன. 'இவர்கள் மூன்று யோஜனாதூார்ம் நீளமும் அகலமும் கொண்ட மகாநாகா (மகியங்கணை) தோட்டத்தில் சடங்கு ஒன்றுக்காக கூடுவர்' என மகாவம்சம் கூறுகிறது. விஜயனின் இலங்கை வருகையின் போது அவன் சந்தித்த இயக்க குல ராணி குவேனி பற்றியதகவல்கள் மகாவ்ம்சத்திலுள்ளன. விஜயன் - குவேனி கதை ஒரு கட்டுக்கதை என்றாலும், சிங்ஹல மூதாதையின் வருகையின்போது இலங்கையில் இயக்கர்களின் ஆட்சி நிலவியது என்ற உண்மை மறுப்பதற்கில்லை. இயக்கர்களின் புகழ் பெற்ற ஒரு நகரமாக சிறிஸ்தவத்து விளங்கியுள்ளது. எனினும் இராமாயாணக் காவியம், தொலமியின்




தேசப்படம், ஜாதகக் கதைகள் என்பனவற்றிலிருந்து இயக்கர்கள் வாழ்ந்த பிரதேசங்களாக திரிகூடம், இலங்காபுரி, அரிந்தகிரி, யக்குரகல, லக்கல, நிகுலாம்பிவனம், துாரமக்க, விந்தனை, மகியங்கணை, சிறஸ்தவத்து, யக்குரே என்பன அடையாளம் காணப்பட்டுள்ளன. இவற்றோடு பொம்பரிப்பு, தாமிரபர்ணி (நகரம்), கதிர்காமம் என்பனபவற்றையும் இயக்கர் குடியிருப்புக்களாகக் கொள்ளாலாம்.வடக்கேயுள்ள இயக்கச்சி என்னுமிடத்தையும் இயக்கர் குடியிருப்பாக கருதவிடமுண்டு.

## நாகர்

பண்டைய இலங்கைத் தீவு முழுவதும் நாகர் இன மக்கள் பரவி வாழ்ந்துள்ளனரெனினும் சிறப்பாக நாகதீவு என வரையறுக்கப்பட்ட வடபகுதியில் செறிந்து வாழ்ந்துள்ளனர். நாகதீவு என்ற பெயரை இப்பிரதேசம் பெறுவதற்குக் காரணமாக அமைந்தவர்கள் இப்பிரதேசத்தின் பண்டைக் குடிமக்களாக வாழ்ந்திருந்த நாகர்களேயாவர். நாகர் எனப்படும் ஒரு மக்கட் கூட்டத்தினர் இலங்கைத் தீவில் நெடுங்காலமாகக் குடியேறி வாழ்ந்து வந்தார்கள் என்பதற்குப் பல ஆதாரங்களுள்ளன.

இலங்கை வரலாற்றின் செய்திகளை அளிக்கும் பனுவலாகக் கருதப்படும் மகாவம்சம், கௌதம புத்தர் இலங்கைக்கு இரண்டாவது தடவை விஜயம் செய்தபோது நாகதீவிலிறங்கி இரண்டு நாக அரசர்களின் பிணக்கைத் தீர்த்து வைத்தார் எனக் கூறுகிறது. மகோதரன், குலோதரன் என்ற இரண்டு நாக மன்னர்கள் ஒரு இரத்தின சிம்மாசனத்திற்காகப் பொருதினர். மகோதரன் நாகதீவின் அரசனாகவும் அவன்து மருமகனான குலோதரன் கந்மாதனத்தின் அரசனாகவும் விளங்கினர். இவ்விரு நாக மன்னர்களும் தத்தமது படைகளோடு பொருதியபோது, புத்தர் அவர்களைச் சமாதானப்படுத்தி வைத்தார். அவரது போதனையால் மனம் மாறிய நாக மன்னர்கள் இருவரும் இரத்தினச்சிம்மாசனத்தைப் புத்தருக்கே வழங்கிவிட்டனர். நாகமன்னர்களின் இச்சர்ச்சை பற்றி மணிமேகலைக் காவியமும் குறிப்பிட்டுள்ளது. நாகதீவுக்கு வெளியே தென்னிலங்கையில்



இன்றைய களனி நதிக் கரையோரத்தில் அமைந்திருந்த கல்யாணி என்ற நாக அரசு பற்றியும் மகாவம்சத்தில் குறிப்புள்ளது. கல்யாணி இராச்சிய அரசனான மணியக்கியன் என்பவன், புத்தரின்போதனைகளை ஏற்றுப் பௌத்தத்தை தழுவினான். மகாவம்சம் கூறுகின்றது. இச்செய்திகளிலிருந்து இலங்கையில் நாக மக்கள் எனப்படுவோர் வாழ்ந்துள்ளனரென அறிய முடிகின்றது.

நாகர்கள் பண்பாடுடைய கலாச்சாரத்தைப் பேணிய மக்கள் என்பதும், புத்தருடைய காலத்தில் இவர்கள் பௌத்தத்தைத் தழுவினர் என்பதும் மேலும் அவர்கள் புத்தருடைய காலத்தில் இலங்கையின் வடபாகத்தில் மட்டுமன்றி தென்மேற்குப் பகுதியிற் களனியாவரை பரவி வாழ்ந்தனர் என்பதும் தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. கிடைக்கக்கூடிய இலக்கிய, பண்டைய தேசப்பட (தொலமி) ஆதாரங்களிலிருந்து இலங்கையின் பல பகுதிகளிலும் நாகர் குடியிருப்புக்கள் இருந்துள்ளன என அறிய முடிகின்றது.

தேவிநுவர, நாகர்கோயில், திருக்கோயில், நனிகிரி, தென்கிழக்கில் நாகதும, நயினாதீவு என்னும் மணிபல்லவம், மதவாச்சி என்னும் மகாவில்லாச்சி, காங்கேசன்துறை என்னும் ஐம்புக்கோளம், வல்லிபுரப்பகுதி, நாகர்கோவில், குருந்தன் குளம், மிகிந்தலைப் பகது, நாகசதுக்கம், கந்தரோடை என்னும் கதிரமலை, கரியாரை நாகபடுவான், மகாதீர்த்தம் (மாந்தை) முதலானவை நாகர் குடியிருப்புக்களாக விளங்கியுள்ளன. இந்த ஆதிக் குடியிருப்புக்கள் ஒவ்வொன்றிற்கும் தந்தை வழிச் சமூக அமைப்பின் வழிமுறைப்படி ஒவ்வொரு தலைவன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தான்.

ஆதிக்குடிகளான நாகர்கள் நாகவழிபாட்டுடன் தொடர்புபடுத்தப்படுகிறார்கள். சிந்துநதி நாகரிக காலத்திலிருந்து நாகவழிபாடு நிலவி வந்துள்ளது. இன்றும் இலங்கையில் இந்துக்கள் நாகவழிபாட்டை மேற்கொண்டு வருகின்றனர். 'கிடைக்கின்ற ஒரு சில தகவல்களைக் கொண்டு நாகவழிபாடு ஆதி இலங்கையில் நிலவியிருக்கலாமென ஊகிக்கமுடியும்.

கி.பி.ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த பாகியான் என்ற நாடு காண் பயணி, இலங்கையின் ஆதிக்குடிகள் பற்றித் தனது நூலில் எழுதியுள்ளார். அவரின் நூலின்படி இந்தத்தீவில் ஆதியில் தேவதைகளும் நாகர்களும் இருந்தார்கள் என்றும் அவர்கள் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வியாபாரிகளுடன் வர்த்தகம் நடாத்தி வந்தனர் என்றும் குறிப்பிட்டுள்ளார். வர்த்தகம் நடாத்தக் கூடியளவிற்கு நாகர்கள் கலாச்சார மேம்பாடுடையவர்களாக விளங்கியுள்ளனர்.

சிங்கள வரலாற்றாசிரியர்கள் நாகர்களை மனிதர்களாக ஏற்கத் தயாராகவில்லை. மகாவம்சம் குறிப்பிடுகின்ற இயக்கர், நாகர் என்போர் மனித வர்க்கத்தினரைக் குறிக்கவில்லையென மெண்டிசும் மகாவம்சத்திலும் மணிமேகலையிலும் நாகர் ஒருபோதும் மனித வர்க்கத்தினராகக் காட்டப்படவில்லை என பரணவிதானவும் கூறியுள்ளார். இவை சிரிப்பிற்குரிய அவதானிப்புக்களாகும். 'இயக்கர்களும் நாகர்களும் மனிதர்களாக ஆதி இலங்கையில் வாழ்ந்தார்கள் என்று கூறுவதில் தவறில்லை. சிங்ஹல விஜயனின் வருகையுடன் தான் இலங்கைத் தீவில் மக்கட் குடியேற்றங்கள் ஆரம்பமாகின என்பதை வலியுறுத்துவதற்காக இத்தீவின் மூதாதையினரை அமானுஸ்யர்கள் என வலியுறுத்தியுள்ளனர் போலும்.

## திராவிடர்

ஈழத்தின் நாகரிக கர்த்தாக்கள் திராவிடரே என்பது புலனாகின்றது. இன்றைய சிங்கள - தமிழ்மொழி பேசுவோர் அவர்களின் சந்ததியினரே என்பதும் உறுதியாகின்றது. அத்துடன் இவ்விரு மொழி பேசுவோருக்கிடையே ஏற்பட்ட கலாச்சார வேறுபாடு ஈழத்தின் வரலாற்றுக் காலத்தில் பௌத்த மதத்தின் வருகையோடு தான் ஏற்பட்டது எனலாம். இங்குள்ள சிங்கள மக்களினதும் தமிழ் மக்களினதும் மூதாதையினர் ஒன்றுக்கு மேற்பட்ட திராவிட மொழிகளைப் பேசினாற் போல தெரிகின்றது. இவற்றுட் தமிழோடு சிங்களத்தின் மூதாதை மொழியாகிய 'எலு'வும் காணப்பட்டது எனலாம். இந்த எலு மொழி பௌத்தம் வந்தபோது அதன் சமயமொழியாகிய பிராகிருதமாகிய பாளியுடன் கலந்தபோதே இன்றைய சிங்கள மொழி உருவாகியது.

அகழ்வாய்வுகள் மூலம் கிடைத்த தொல்பொருட் சான்றுகள் இலங்கையில் சிங்கள விஜயன் வருவதற்கு முன்னரே திராவிட மக்கள் தமக்குரிய கலாச்சாரத்துடன் வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை நிரூபிப்பனவாகவுள்ளன.

ஆரியர்கள் வட இந்தியாவில் நிலை கொண்டபோது திராவிடர்கள் ஆரியர்களால் நெருக்கப்பட்டு இந்தியாவின் தென்பாகத்திற்கும் இலங்கைக்கும் குடி பெயர்ந்தார்கள். அவ்வாறு இடம் பெயர்ந்த திராவிடர்களின் குடியேற்றம் நாகதீவில் மிகக் கூடுதலாக நிகழ்ந்திருத்தல் வேண்டும். தென்னிலங்கையில் சிங்ஹல விஜயனைத் தொடர்ந்து புதிய குடியேற்றங்கள் நிலை கொள்ளத் தொடங்கியவேளை வட இலங்கையில் திராவிடக் குடியேற்றம் வளர்வதாயிற்று. சேர் .போல் பீரிஸ் என்ற அறிஞரின் கருத்துப்படி விஜயன் பிறப்பதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே வட இலங்கையில் குடியிருப்புக்கள் விருத்தியுற்றிருந்தன என்பதாகும். இந்தியாவிலிருந்து ஆக முப்பது மைல் கடலே வடவிலங்கையைப் பிரிக்கின்றது. அதனை இலகுவில் கலங்களில் தாண்டி வடவிலங்கையில் குடியிருப்புக்கள் உருவாகின. இலங்கைத் தீவின் ஆதிக்குடிகள் இயக்கர், நாகர் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட சங்கதியாகும். ஆதிக்குடிகள் இவர்களாயின் இவர்கள் திராவிடர்கள் என்பதை நிரூபிக்கும் சான்றுகளாகப் பின்வருவன உள்ளன.

1) ஈமச்சின்னங்கள்
2) ஆதிப்பிராமிக் கல்வெட்டுக்கள்
3) ஆதிமக்களது சமய வழிபாடு

தொல்லியலாய்வுகள் மூலம் இன்று இக்கருத்தினை நிலைநாட்டிய பெருமை ஈழத்தின் மூன்றாம் தலைமுறை வரலாற்றாசிரியர்களுக்கும் தொல்லியலாய்வாளர்களுக்கும் உரியதாகும்.

இலங்கையில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே மனித குலம் நிலை பெற்றிருந்தது என்பதற்கு ஆதாரமாகப் பலாங்கொடைப் பகுதியில் அகழ்வாய்வின் மூலம் கிடைத்த புராதன மனிதரின் எலும்புச் சுவடுகள் ஆதாரமாகின்றன. நியாண்டல்தால் மனிதரின் சுவடொத்த இவை இலங்கையில் ஆதி மனிதர்கள் வாழ்ந்தனர் என்பதற்கு ஆதாரமாகின்றன.

(தொடரும்)

**-செங்கை ஆழியான்-**